LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

# A STUDY OF HISTORICAL REVIEW OF BT/ VINCENT GIRL'S HIGH SCHOOL

NAME :- SUNDARARAJAN MAYURI

RE NO :- EU/IS/2011/AC/39

INX NO :- CS 4339

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
18 APR 2018
Vantharumoolai
Chenkalady

THE DESSERTATION SUBMITTED FOR THE PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENTS FOR THE DEGREE OF BACHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE FACULTY OF ARTS & CULTURE, EASTERN UNIVERSITY,SRILANKA.

FAC495
Project Report
Library - EUSL

DEPARTMENT OF HISTORY

FACULTY OF ARTS AND CULTURE

EASTERN UNIVERSITY

SRI LANKA.

2017.

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

இலங்கையில் பல்வேறு ஆட்சியாளர்கள் காலத்துக்கு காலம் ஆட்சி செய்து வந்துள்ளனர். இருந்தாலும் பிரித்தானியரின் ஆட்சிக்கு பின்னரே சமூக, பொருளாதார, அரசியல், கலைத் துறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டது. இதன் மூலம் பல்வேறு அபிவிருத்திகளும் இடம் பெற்றன. பிரித்தானிய ஆட்சியின் போது ஏனைய காலங்களில் ஏற்படாத ஒரு வளர்ச்சி நிலை கல்வித் துறையில் ஏற்பட்டது.

அக்கால இலங்கையில் கல்வித்துறைகளில் பிரித்தானியரால் கல்வி சார் முயற்சிகள் வெகுவாக முன்னெடுக்கப்பட்டன. இம் முயற்சியில் இலங்கையில் அமெரிக்க, கிறிஸ்தவ, மெதடிஸ்த மற்றும் பப்டிஸ்ட் மிஷனரிகள் கல்விப் பணியை முன்னெடுத்தனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிறிஸ்தவ மிஷனரியின் தன்னலமற்ற சேவையின் மூலம் கல்வி நடவடிக்கைகள் அதிகமாக இடம்பெற்றன. அக்கால மட்டக்களப்பு பல்சமூக, சமய வேறுபாடுகளைக் கொண்ட முரண்பாடான வகையில் காணப்பட்டது. இவற்றை கல்வி மூலமாக சீர்திருத்தலாம் என்ற கிறிஸ்தவ மிஷனரியின் நோக்கத்தின் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறான ஒரு சமூக பின்னணியிலே 1820ஆம் ஆண்டு மட்/ வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலைஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் கல்வியின் அவசியம் உணரப்பட்டு அவர்களுக்கென தனியானதொரு பாடசாலைஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற சிந்தனையின் விளைவாக கிறிஸ்தவ பாதிரியாரின் துணைவியாரான திருமதி. ஒஸ்புமோன் அவர்களின் மேற் பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதே வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை ஆகும்.

இக்காலப் பகுதியின் பாடசாலையின் வரலாற்றுச் சம்பவங்களும், ஏனைய விடயங்களும் " மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலையின் வரலாற்றுப் பார்வை (1820 – 2017)" என்ற தலைப்பிலான எனது ஆய்வறிக்கையில் ஊடாக தரப்பட்டுள்ளது. அந்த வகையில் பாடசாலை சார் வரலாற்றுத் தகவல்கள், ஆண்டறிக்கைகள், நூல்கள் மற்றும் சஞ்சிகைகள், நேர்காணல்கள் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டள்ளது.

இவ்வாய்வானது ஆய்வு நோக்கம் கருதி ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதலாவது அத்தியாயமானதுஆய்வின் அறிமுகம், ஆய்வின் நோக்கம், ஆய்வுக்கருதுகோள், ஆய்வு முறையியல், ஆய்வுப் பிரச்சனை, ஆய்வு அறிமுக முடிவுரை ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இரண்டாவது அத்தியாயமானது தலைப்பிற்கேறப் பாடசாலையின் தோற்றம் பற்றி கூறுகின்றது. அதாவதுமட்டக்களப்பில் கிறிஸ்தவ மிஷனரியின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாடசாலையின் தோற்றம், அதன் ஸ்தாபகர், பாடசாலையின் தோற்றத்திற்கான காரணங்கள், பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட சூழல் போன்றவற்றை கொண்டுள்ளதாக அமைந்துள்ளது.

மூன்றாவது அத்தியாயமானது 1820 தொடக்கம் 2000 வரையிலான சுமார் நூற்றி எண்பது கால வளர்ச்சியை கூறுகின்றது.அதாவது கல்விநடவடிக்கைகள், பௌதீக நிலை, வினையாட்டுத் துறை,இலக்கியத் துறை, அதன் சங்கங்களும் கழகங்களும், அக் காலப் பகுதியில் இடம்பெற்ற பிரதான விழாக்கள் என்ற அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நான்காவது அத்தியாயத்தில் பாடசாலையின் தற்கால நிலை எனும் தலைப்பினூடாக 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரையிலான காலத்தை மையமாக வைத்து ஆய்வு செய்துள்ளேன். இறுதியாக இவையாவற்றையும் உள்ளடக்கிய வகையிலும் சமூகத்தில் பாடசாலையின் பங்களிப்பைக் கூறும் வகையில் தொகுப்புரை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக் கட்டுரையானது ஒரு வரலாற்று ஆய்வாக உள்ளதாலும், இதில் ஒரு ஆவணப்படுத்தல் முறைமை காணப்படுவதாலும், மேலும் பிற் காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட கல்வித் துறையின் போக்கு பற்றி ஆய்வு செய்வோருக்கு பகுதி அளவிலான தகவற் களஞ்சியமாக இவ் ஆய்வு இருக்கலாம் என்பது எனது நம்பிக்கையாகும்.

-ஆய்வாளர் -